DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO. 75/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா. 5

Defence

Court

Name : சுப்பிரமணி
Father/ Husband Name : நாகலிங்கம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **24.04.2023**

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது வெள்ளிக்கட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது எந்த வேலையும் பார்க்கவில்லை. அ.சா.1ஐ தெரியும். எதிரியை தெரியும். சம்பவம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை:

கடந்த 19.09.2021-ம் தேதி திருவேகம்பத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்யும்போது கடந்த 14.09.2021-ம் தேதி மாலை 03.00 மணியளவில் எதிரி அ.சா.1ன் இடத்தில் வைத்திருந்த வேலியை வெட்டி பிரித்து எடுத்தார் என்று போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. அப்போது அ.சா.1 எதிரியிடம் ஏன் வேலியை பிரிக்கிறாய் என்று கேட்ட போது

அவரை அசிங்கமான வார்த்தையால் திட்டினார் என்று போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது அ.சா.1, அ.சா.2ஐ எதிரி அருவாளை காட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு அப்போது எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.R.M.**மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.